(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 6(4).]

# பாராளுமன்றம்

## 6 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2012 யூலை 20 வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

## 2012 ஓகத்து 07, செவ்வாய்க்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

*சுற்றாடல் அமைச்சர்,— காடு பேணல் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,—* (451 ஆம் அத்தியாயமான) காடு பேணல் கட்டளைச் சட்டத்தின் 24 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் சுற்றாடல் அமைச்சரினால் விதிக்கப்பட்டு 2012 யூன் மாதம் 11 ஆம் திகதிய 1762/1 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2012.07.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

## 2012 ஓகத்து 09, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2100/ ’11

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2009 ஆம் ஆண்டில் இறக்குமதி செய்யப்பட்ட மருந்துகள் மற்றும் சத்திர சிகிச்சை உபகரணங்களுக்காக துறைமுகத்திற்குச் செலுத்தப்பட்ட தாமதக் கட்டணத் தொகை மற்றும் செலுத்தப்பட்ட தரப்பு யாதென்பதையும்;

(ii) 2006, 2007, 2008 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் மேற்படி இறக்குமதிகளுடன் தொடர்புடையதாக அரச மருந்தகக் கூட்டுத்தானம் செலுத்தியுள்ள தாமதக் கட்டணங்கள் தனித்தனியாக யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2008 ஆம் ஆண்டு இனங்காணப்பட்ட பழுதடைந்த , காலாவதியான மற்றும் தரத்தில் குறைந்த மருந்துகளின் பெறுமதி எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி தரத்தில் குறைந்த மருந்து வழங்குநர்களிடமிருந்து அறவிடப்படவேண்டியுள்ள பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி பணத் தொகை அறவிடப்படாமைக்கான காரணம் யாதென்பதையும்;

(iv) 2008 ஆம் ஆண்டு கொள்வனவு செய்யப்பட்ட மருந்துகள் தரத்தில் குறைந்தவையென வெளிப்படுத்தப்பட்ட போதிலும் கேள்விப்பத்திரச் சபையானது மீளக் கொள்வனவு செய்கின்றபோது இதனைக் கவனத்திற்கொள்ளாமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) சபியுரொக்ஷிம் சோடியம் (Cefuroxime Sodium) 750 மில்லிகிராம் 250,000 அலகு தடுப்பூசி மருந்துகள், 2009 ஆம் ஆண்டு ஆய்வுகூட பரிசோதனையின்றி கொள்வனவு செய்யப்பட்ட கட்டுத்துணி மற்றும் உரிய நிறையின்றி அமொக்சிலின் நுண்ணுயிர்கொல்லி வில்லைகள் 250 மில்லிகிராம் 6783 அலகுகள் ஆகியவற்றை மருந்தகக் கூட்டுத்தானம் கொள்வனவு செய்த வேளையில் ஏற்பட்ட நட்டம் யாதென்பதை தனித்தனியாக அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2421/ '12

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— தொழில், தொழில் உறவுகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஊழியர் சேமலாப நிதிய வைப்புகளுக்காக வருடாந்தம் வழங்கப்படும் வட்டி வீதம் யாதென்பதையும்;

(ii) ஊழியர் சேமலாப நிதிய பயனாளிகளுக்கு கிடைக்கும் ஏனைய சிறப்புரிமைகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) ஊழியர் சேமலாப நிதிய தலைமையகத்திற்காக நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள கட்டடத்திற்கென மதிப்பீடு செய்யப்பட்டுள்ள செலவில் ஊழியர் சேமலாப நிதியத்திலிருந்து ஈடுசெய்ய எதிர்பார்த்துள்ள தொகை யாதென்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2012 ஓகத்து 10 வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2422/ '12

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2012 ஒலிம்பிக் போட்டிகளில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி ஒவ்வொரு விளையாட்டு நிகழ்ச்சியிலும் பங்குபற்றும் விளையாட்டு வீரர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு விளையாட்டு நிகழ்ச்சிக்காகவும் விளையாட்டு வீரர்கள் தெரிவு செய்யப்பட்ட நாட்கள் யாவை என்பதையும்;

(iii) 2012 ஒலிம்பிக் குழுவுக்கென பெயரிடப்பட்டுள்ள விளையாட்டு வீரர்களின் மொத்த எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) அவ்வாறான ஒவ்வொரு நிகழ்ச்சிக்காகவும் தெரிவு செய்யப்பட்டுள்ள விளையாட்டு வீரர்களின் பயிற்றுவிப்பாளர்களும் பயிற்சிக்கான அனுசரணையாளர்களும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனரா என்பதையும்;

(v) விளையாட்டு வீரர்களும் அனுசரணையாளர்களும் தெரிவுசெய்யப்படும் அடிப்படை யாதென்பதையும;

(vi) 2012ஆம் ஆண்டு ஒலிம்பிக் குழுவில் இடம்பெற்றுள்ள ஒரு விளையாட்டு வீரருக்காக ஒதுக்குவதற்கு எதிர்ப்பார்த்துள்ள பணத் தொகை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2247/ '12

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2011 ஏப்பிரல் மாதம் 01 ஆம் திகதி தாபிக்கப்பட்ட வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுவின் பதவிக் காலம் யாதென்பதையும்;

(ii) மேற்படி ஆணைக்குழுவிற்கு நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு உத்தியோகத்தரினதும் முழுப்பெயர் மற்றும் தகைமைகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுவிற்காக வாடகைக்கு பெற்றுக் கொள்ளப்பட்ட ஐந்து மாடிக் கட்டிடத்தொகுதியின் அமைவிடம் மற்றும் அதற்காக மாதாந்தம் செலுத்தப்பட்ட வாடகை யாதென்பதையும்;

(ii) மேற்படி ஆணைக்குழுவின் ஊழியர்களுக்கான சம்பளங்கள், நீர் கட்டணம், மின்சாரக் கட்டணம் உள்ளிட்ட மீண்டெழும் செலவினங்களுக்காக முதல் ஆறு மாதங்களில் செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) உண்ணாட்டரசிறைத் திணைக்களத்தின் கீழிருந்த 120 வரி மேன்முறையீட்டுக் கோப்புகள் புதிதாக அமைக்கப்பட்ட வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுவிற்கு சாட்டப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) மேற்படி கோப்புகள் சம்பந்தமாக எவ்வித விசாரணைகளும் குறிப்பிட்ட காலப்பகுதியில் நிறைவுசெய்யப்படவில்லை என்பதையும்;

(iii) இதன் காரணமாக அரசாங்கத்திற்கு அண்ணளவாக ரூபா 800 கோடி நட்டம் ஏற்பட்டுள்ளது எள்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) ஆமெனில், இது சம்பந்தமாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

2423/ '12

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— விளையாட்டுத் துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய கால்பந்தாட்ட குழுவுக்கு 2011 ஆம் ஆண்டில் தெரிவு செய்யப்பட்ட விளையாட்டு வீரர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி ஒரு வீரருக்கு விளையாட்டு அமைச்சினாலும் கால்பந்தாட்ட சம்மேளத்தினாலும் ஒதுக்கப்பட்டுள்ள பணத் தொகை யாதென்பதையும்;

(iii) பெத்தகானேயில் அமைந்துள்ள தேசிய கால்பந்தாட்ட பயிற்சி நிலையத்தில் கால்பந்தாட்ட வீரர்களின் பயிற்சிகளுக்காக வருடமொன்றுக்கு ஒதுக்கப்படும் பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி நிதி பெற்றுக்கொள்ளப்படும் மூலங்கள் யாவையென்பதையும்;

(v) தற்போது பெத்தகான பயிற்சி நிலையத்தில் தங்கியிருந்தும் பகுதி நேர அடிப்படையிலும் பயிற்சி பெறும் விளையாட்டு வீரர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வெளி மாகாணங்களிலிருந்து தேசிய கால்பந்தாட்ட குழுவுக்கு தெரிவு செய்யப்படும் வீரர்களுக்கு வழங்கப்படும் வசதிகள் யாவையென்பதையும்;

(ii) தேசிய கால்பந்தாட்டக் குழுவின் விளையாட்டு வீரர்களுக்கு முழு நேரம் விளையாட்டில் ஈடுபடுவதற்குத் தேவையான அனுசரணை கிடைக்கின்றதா என்பதையும்;

(iii) இன்றேல், அவ்வாறான அனுசரனையை வழங்குவதற்கான வேலைத்திட்டம் யாதென்பதையும்

அவர் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2424/ '12

கௌரவ சுனில் ஹதுன்னெத்தி,— கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் இறுதியாக காட்டு யானைகளின் தொகை மதிப்பு மேற்கொள்ளப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) மேற்படி தொகை மதிப்புக்கமைய தற்போது காணப்படும் காட்டு யானைகளின் எண்ணிக்கை மாவட்ட ரீதியில் வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) சரணாலயங்களைத் தவிர காட்டு யானைகள் தங்கியிருக்கும் ஏனைய இடங்கள் யாவையென்பதையும்;

(iv) கிராமங்களுக்குள் நுழையும் காட்டு யானைகளினால் துன்பப்படும் மக்களுக்கு நிவாரணமளிப்பதற்கு அரசாங்கம் மேற்கொள்ளும் எதிர்கால நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2012 ஓகத்து 21, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1188/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) கோதுமை மாவின் கடந்த 5 வருடங்களுக்கான,

(i) மொத்த நுகர்வையும் அதன் தலாவீத நுகர்வையும்;

(ii) உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட தொகையையும்;

(iii) இலங்கையில் கிலோ ஒன்றுக்கான உற்பத்திச் செலவையும்;

(iv) இறக்குமதி செய்யப்பட்ட தொகையையும்;

(v) இறக்குமதி செய்யப்பட்ட தொகையின் பெறுமதியையும்

வருடாந்த அடிப்படையில் அவர் தெரிவிப்பாரா?

(ஆ) இறக்குமதி செய்யப்படும் மற்றும் உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் ஒரு கிலோ கோதுமை மா மீது விதிக்கப்படும் எல்லா வரிகளையும் (நேரடி மற்றும் மறைமுக) தனித்தனியாக அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1642/ '11

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) காலி மாவட்டத்தின் எல்பிட்டிய வலயக் கல்விக் காரியாலயத்துக்குரிய கா/அகுலுகல்லை கனிஷ்ட பாடசாலை மூடப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) அதனால், அப்பாடசாலைக்குச் சொந்தமான பாரியளவு பௌதீக வளங்கள் அழிவடைந்து வருகின்றன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பாடசாலையை மீண்டும் திறப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கு எடுக்கும் காலம் எவ்வளவு என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி பாடசாலையை மீண்டும் திறக்காவிடின், அதனை வேறு பொருளாதார நடவடிக்கைகாக பயன்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில்,அப்பொருளாதார நடவடிக்கை யாது என்பதையும்;

(iii) அதற்கு எடுக்கும் காலம் எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1907/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— வெகுசன ஊடக, தகவல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தேசிய தொலைக்காட்சிக்குச் சொந்தமான, விளையாட்டுப் போட்டிகளை ஒளிப்பதிவு செய்துள்ள நாடாக்களை அல்லது இருவட்டுகளை கால்ரன் விளையாட்டு அலைவரிசைக்கு (CSN) வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவ்வாறு வழங்குவதற்கான காரணங்கள் யாதென்பதையும்;

(iii) மேற்படி நாடாக்கள் அல்லது இருவட்டுகள் வழங்கப்பட்ட அடிப்படை யாதென்பதையும்;

(iv) மேற்படி நாடாக்களை பெற்றுக்கொள்வதற்காக கால்ரன் விளையாட்டு அலைவரிசை தேசிய தொலைக்காட்சிக்கு செலுத்திய பணத் தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கால்ரன் விளையாட்டு அலைவரிசையினால் மேற்படி நாடாக்கள் அல்லது இருவட்டுகளை பெற்றுத் தரும் படி வேண்டுகோள் விடுக்கப்பட்டிருப்பின் மேற்படி வேண்டுகோளை விடுத்தவரின் விபரங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி வேண்டுகோள் கடிதம் யாதென்பதையும்;

(iii) தேசிய தொலைக்காட்சியினால் மேற்படி நாடாக்கள் அல்லது இருவட்டுகளை விடுவிப்பதற்கு அதிகாரம் வழங்கிய உத்தியோகத்தரின் பெயர் மற்றும் பதவி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1833/ '11

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தின் தமிழ் மொழிமூல அரச பாடசாலைகளில் கஷ்டப் பிரதேச சேவைக்காலத்தை பூர்த்தி செய்தபின்னர் இடமாற்றம் கிடைக்காததனால் பெரும் விரக்திக்கு உள்ளாகியுள்ள ஆசிரியர்கள் பெருமளவில் இருக்கின்றார்கள் என்பதையும்;

(ii) இவ்வாறு விரக்திக்கு உள்ளாகியுள்ளமை இவ்வாசிரியர்களின் கற்பித்தல் செயற்பாட்டின் தரம் குறைவடைவதற்குக் காரணமாயமைந்துள்ளது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) தற்போது மாத்தறை மாவட்டத்தில் இடமாற்றம் கோரியுள்ள தமிழ் மொழிமூல ஆசிரியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இவர்களில் உரிய தகைமைகளை பூர்த்திசெய்துள்ள ஆசரியர்களுக்கு இடமாற்றம் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

(iii) ஆமெனில், எத்தேதிகளில் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1934/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— பெற்றோலியக் கைத்தொழில்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010ஆம் ஆண்டு மற்றும் 2011ஆம் ஆண்டு முதல் இற்றை வரையிலும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு (CPC) ஏற்பட்ட இலாபம் அல்லது நட்டத்தை வெவ்வேறாகவும்;

(ii) இலாபம் அல்லது நட்டத்திற்கான காரணத்தையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) பெற்றோலிய உற்பத்திகளின் இறக்குமதியிலிருந்து இறுதியாக அவை உபயோகிக்கப்படும் வரையிலும் விதிக்கப்பட்ட சகல விதமான வரிகள் மற்றும் கட்டணங்களையும் உள்ளடக்கிய பின் ஏற்பட்ட மொத்த இலாபம் அல்லது நட்டம்; மற்றும்

(ii) பெற்றோலிய உற்பத்திகள் மீது வரிகளை சுமத்தி விற்பனை செய்வதன் மூலம் நியாயமற்ற வகையில் பாரிய இலாபத்தை ஏன் அரசாங்கம் ஈட்டியது என்பதையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இழப்புக் காப்பீட்டு (hedging) முறைகேட்டின் காரணமாக வெளிநாட்டு வங்கிகளுக்கு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் தற்போது செலுத்தவேண்டியுள்ள தொகையையும் அவர் கூறுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2123/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் வரையறுக்கப்பட்ட மகநெகும வீதி நிர்மாண உபகரணங்கள் கம்பனியில் முதலீடு செய்யப்பட்டுள்ள பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி பணம் முதலீடு செய்யப்பட்ட ஆண்டுகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி முதலீடுகளுக்காகப் பெறப்பட்ட இலாபம் அல்லது நட்டம் எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி பணத்தை முதலீடு செய்வதற்கு தீர்மானித்தவர்கள் யாவர் என்பதையும்;

(v) இதற்கு நிதி அமைச்சின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதா என்பதையும்;

(vi) ஆமெனில், அதனுடன் தொடர்புடைய ஆவணங்களை சபா பீடத்தில் சமர்ப்பிப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1834/ '11

கௌரவ புத்திக பத்திரண,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன , மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இரத்தினபுரி மாவட்டத்தில் அமைந்துள்ள குறுவிட்ட பொலிஸ் நிலையத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட இரண்டு மாடிக் கட்டிடத்தின் பணிகள் முடிவடைந்து நான்கு வருடங்கள் கடந்த நிலையிலும் அது பயன்படுத்தப்படாமல் மூடப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இக்கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) நிர்மாணப் பணிகள் முடிவுற்றிருந்தும் இப்புதிய கட்டிடம் திறந்து வைக்கப்படாதுள்ளமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iii) புதிய கட்டிடத்தில் குறுவிட்ட பொலிஸ் நிலையத்தின் கடமைகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1935/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— பெற்றோலியக் கைத்தொழில்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2011 ஆம் ஆண்டு மே மாதம் முதல் யூலை மாதம் வரை தரக்குறைவான பெற்றோல் மற்றும் ஏனைய பெற்றோலிய உற்பத்திகளை இலங்கைக்கு விநியோகித்தவர் அல்லது விநியோகித்தவர்களையும்;

(ii) இந்த முறைகேட்டிலிருந்து அமைச்சு எவ்வாறு தவிர்க்கப்பட்டது என்பதையும்;

(iii) தரக்குறைவான பெற்றோல் உபயோகத்தால் பாதிப்புக்குள்ளான நுகர்வோரின் எண்ணிக்கையையும்;

(iv) தரக்குறைவான பெற்றோல் காரணமாக ஏற்பட்ட சேதங்கள் தொடர்பாக முறைப்பாடுகளை மேற்கொண்ட வாடிக்கையாளரின் பெயர்களையும்;

(v) பாதிப்படைந்த ஒவ்வொரு நுகர்வோருக்கும் வழங்கிய நட்ட ஈட்டை வெவ்வேறாகவும்;

(vi) தரம் குறைந்த பெற்றோல் காரணமாக இயந்திரங்கள் பழுதடைந்த எரிபொருள் நிலையங்களின் எண்ணிக்கையையும்;

(vii) அவ்வாறான எரிபொருள் நிலையங்களுக்கு எவ்வாறு நட்ட ஈடுகள் வழங்கப்படுகின்றன என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) தரக்குறைவான பெற்றோல் சூழ்ச்சித் திட்டத்தை வெளிச்சத்திற்கு கொண்டுவந்த தரப்பினருக்கு கவர்ச்சிகரமான மிகையூதியமொன்று வழங்கப்படுமா என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2124/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பெரிய பிரித்தானியாவினால் வழங்கப்பட்ட இரும்புப் பாலங்கள் கருத்திட்டத்தின் கீழ் இலங்கை முழுவதிலும் நிர்மாணிக்கப்பட்ட இரும்புப் பாலங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) அவை அமைந்துள்ள இடங்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி பாலங்களை நிர்மாணிப்பதற்காக பிரித்தானியா வழங்கிய பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு பாலத்தினதும் நீளம், அகலம், மதிப்பீட்டுத் தொகை மற்றும் நிர்மாணிப்புச் செலவு வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(v) ஒவ்வொரு பாலத்திற்காகவும் மதிப்பீடு செய்யப்பட்ட தொகையை விட மேலதிகமாக செலவான தொகை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(vi) மதிப்பீடு செய்யப்பட்ட தொகையை விட செலவு அதிகரித்தமைக்கான காரணங்கள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

## 2012 ஓகத்து 22, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1383/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— விளையாட்டுத் துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2009, 2010, 2011 ஆம் ஆண்டுகளில் இலங்கை கிரிக்கெட் நிறுவனத்திற்கு ஏற்பட்ட,

(i) இலாபம் அல்லது நட்டம் எவ்வளவு என்பதையும்;

(ii) ஐந்தொகையுடன் இறுதி வரவு செலவுக் கணக்கு எவ்வளவு என்பதையும்;

தனித்தனியாக அவர் சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளுக்கான காசுப்பாய்ச்சல் எவ்வளவு என்பதையும்;

(ii) இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் சொத்துக்கள் என்ன என்பதையும்;

(iii) இலங்கை நாணயப் படி ஒரு மில்லியன் அல்லது அதற்கு மேற்பட்ட செலவை ஏற்படுத்திய மைதானங்கள் அல்லது ஏனைய விடயங்கள் எவை என்பதையும்;

(iv) மேற்படி செலவினங்களை தனித்தனியாகவும்

அவர் கூறுவாரா?

(இ) (i) இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் நிரந்தர மற்றும் தற்காலிக பணியாளர்களின் பெயர்களை தனித்தனியாகவும்;

(ii) 2010 மற்றும் 2011 முதல் இற்றைவரை பணியாளர்களுக்கான கொடுப்பனவிற்காக ஏற்பட்ட மொத்தச் செலவு எவ்வளவு என்பதை தனித்தனியாகவும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1643/ '11

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) புத்தளம் மாவட்டத்தில் அமைந்துள்ள பதுராவளை அரசாங்கப் பாடசாலை மூடப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) தற்போது, மேற்படி பாடசாலைக்குரிய பல இலட்சம் ரூபாய் பெறுமதிவாய்ந்த கட்டிடங்கள் சிதைவடைந்து வருகின்றன என்பதையும்;

(iii) பிரதேசத்தின் சிறுவர் சிறுமியர்களுக்காக, மீண்டும் இப்பாடசாலையை திறந்து வைக்குமாறு அப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கிறார்கள் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பாடசாலையை மீண்டும் திறப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா;

(ii) ஆமெனில், அதற்காக எடுக்கும் காலம் யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி பாடசாலையை திறக்காவிடின், வேறு பயனுள்ள பொருளாதார நடவடிக்கைக்குப் பயன்படுத்துவதற்காக நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அதற்காக எடுக்கும் காலம் யாது என்பதையும்;

(iii) மேற்படி பாடசாலையைப் பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் பொருளாதார நடவடிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1987/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2010 ஆம் ஆண்டளவில் உயர் கல்வி அமைச்சின் கீழ் உள்ள அனைத்து பல்கலைக்கழகங்கள் மற்றும் அவற்றுக்குரிய நிறுவனங்களுக்கு பாதுகாப்புச் சேவைகளை வழங்கும் பணி ஒப்படைக்கப்பட்டிருந்த தனியார் பாதுகாப்பு சேவைகளை வழங்கும் நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு பாதுகாப்பு நிறுவனத்தினாலும் பாதுகாப்பு வழங்கப்படும் பல்கலைக்கழகங்கள் மற்றும் அவற்றுக்குரிய நிறுவனங்கள் தனித்தனியே யாவை என்பதையும்;

(iii) 2010 ஆம் ஆண்டளவில் ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலும் ஈடுபடுத்தப்பட்டிருந்த பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை மற்றும் தற்சமயம் ஈடுபடுத்தப்பட்டுள்ள பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(iv) பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவருக்கு 2010 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட பணத் தொகை மற்றும் தற்போது செலுத்தப்படும் பணத்தொகை தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(v) மேற்படி ஒவ்வொரு நிறுவனமும் மாதாந்தம் பாதுகாப்புக்காக செலவிடும் பணத் தொகை தனித்தனியே எவ்வளவென்பதையும்

அவர் இச் சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1835/ '11

கௌரவ புத்திக பத்திரண,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2011 – 2012 ஆம் கல்வி ஆண்டுக்காக அரசாங்கப் பல்கலைக் கழகங்களுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள மாணவ/மாணவிகளுக்கு தகவல் தொழில்நுட்பம் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடநெறிகளை நடத்துவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) இதற்காக மாவட்ட இணைப்பதிகாரிகள் இருபத்திரண்டு பேர் பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர் என்பதையும்;

(iii) மேற்படி உத்தியோகத்தர்களைப் புறக்கணித்து பயிற்றுவிக்கப்படாத உத்தியோகத்தர்களைக் கொண்டு இப் பாடநெறிகள் நடத்தப்படுகின்றன என்பதையும்;

(iv) இதன் காரணமாக இப் பாடநெறிகளின் தரம் குன்றுகின்றதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) பல்கலைக் கழகங்களில் மேற்படி பாடநெறிகளை நடத்துவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி நிதி செலவிடப்படும் முறையியல் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1936/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு முதல் மாத்தறை வரையிலான தெற்கு அதிவேகப் பாதையின் ஆரம்பத் திட்டத்தையும்;

(ii) தெற்கு அதிவேகப் பாதை நிர்மாணத்திற்காக மதிப்பிடப்பட்ட செலவு எவ்வாறு திருத்தியமைக்கப்பட்டது என்பதையும்;

(iii) திருத்தங்களுக்கான காரணங்களையும்

அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) மாத்தறை - கொழும்பு தெற்கு அதிவேகப் பாதையானது அம்பாந்தோட்டை வரை நீடிக்கப்படவுள்ளதா என்பதையும்;

(ii) ஆம் எனில், அவ்விரிவாக்கத்திற்காக மதிப்பிடப்பட்ட தொகையையும்;

(iii) அதற்கு எவ்வாறு நிதியிடப்படும் என்பதையும்;

(iv) அக்கருத்திட்டத்தின் நன்மைகளையும்;

(v) இந் நிர்மாணத்திற்கான கால அளவையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல் ஏன்?

2125/11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கல்முனை மற்றும் சவளக்கடை வீதியில் அமைந்துள்ள கித்தங்கி பாலத்தின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாது;

(ii) அதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட பணத்தொகை யாது;

(iii) குறித்த நிர்மாணப் பணிகளை ஆரம்பிக்க வேண்டியிருந்த திகதியும் பூர்த்தி செய்யவேண்டியிருந்த திகதியும் யாது;

(iv) தற்போது குறித்த நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளனவா;

(v) பூர்த்தி செய்யவேண்டியிருந்த தினத்தில் பூர்த்தி செய்யப்படவில்லையெனில், அதற்காக தாமதக் கட்டணம் அறவிடப்பட்டுள்ளதா;

(vi) ஆமெனில், அப் பணத் தொகை யாது;

(vii) குறித்த நிர்மாணப் பணிகளை மேற்கொண்ட நிறுவனத்தின் பெயர் யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1836/ '11

கௌரவ புத்திக பத்திரண,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களில் தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்களைச் சார்ந்து வசிக்கும் மக்களில் பெரும்பாலானோருக்கு பிறப்புச் சான்றிதழ்கள் கிடையாதென்பதையும்;

(ii) இதனால் தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்ள இயலாதுள்ளதென்பதையும்;

(iii) இதன் காரணமாக தேர்தல் ஆவணங்களில் பெயர்கள் உள்ளடக்கப்படாமையால் வாக்குரிமையைக்கூட இழந்துள்ளனர் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பிரதேசங்களில் வசிக்கும் பிறப்புச் சான்றிதழ் இல்லாதவர்களுக்கு அவற்றை வழங்குவதற்கான துரித வேலைத்திட்டமொன்றை வகுப்பாரா;

(ii) ஆமெனில், அதற்கு எவ்வளவு காலம் எடுக்கும்

என்பதை அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி மாவட்டங்களில் தமிழ் மக்கள் வசிக்கும் பிரதேசங்களுடன் சிங்கள மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளமையால் கடமைகளை நிறைவேற்றுகையில் மக்களுக்கு மொழிப் பிரச்சினை தோன்றியுள்ளதென்பதை அறிவாரா;

(ii) ஆமெனில், இந்நிலைமையைத் தவிர்க்கும் பொருட்டு தமது மொழியில் கடமைகளை நிறைவேற்றிக்கொள்ளக்கூடிய வகையில் கிராம உத்தியோகத்தர்களை நியமிக்க நடவடிக்கை எடுப்பாரா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1937/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— பெற்றோலியக் கைத்தொழில்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் 42 வருடகால பழமைவாய்ந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் தற்போதைய காலத்திற்கு பொருத்தமற்றது என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை விரிவாக்குவதற்காக ஈரானிய அரசாங்கத்தினால் வழங்குவதற்கு வாக்குறுதியளிக்கப்பட்ட கடன் கிடைக்கப்பெற்றதா என்பதையும்;

(ii) அவ்வாறெனில், அது எப்போது கிடைத்தது என்பதையும்;

(iii) அரசாங்கத்தின் எதிரிணை நிதியீட்டத்தையும்;

(iv) கருத்திற்கொண்டுள்ள சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து எதிர்பார்க்கின்ற வெளியீட்டின் அளவு எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) தற்போது ஒரு நாளைக்கு 100,000 பெரல்கள் மசகு எண்ணெய்யை சுத்திகரிக்கும் ஆற்றல் இரு மடங்காக அதிகரிக்குமா என்பதையும்;

(ii) சுத்திகரிப்பு நிலையத்தை விஸ்தரிப்பதற்காக 1/3 பங்கு கடனை மாத்திரம் ஈரான் வழங்கியதா என்பதையும்;

(iii) 1/3 பங்கு கடனின் பெறுமதி 1.5 பில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களா என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஈ) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் உள்ள சில தரப்பினர் தமது தனிப்பட்ட நலன்களை கருத்திற்கொண்டு கேவலமான முறையில், தொடர்ச்சியாக வெளியிலிருந்து எண்ணெய்யை வாங்குவதன் மூலம் சுத்திகரிப்பு நிலைய விரிவாக்கச் செயற்பாடுகள் இழுத்தடிக்கப்படுகின்றன என்பதை அவர் ஏற்றுக் கொள்வாரா?

(உ) இன்றேல், ஏன்?

2126/11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வரையறுக்கப்பட்ட மகநெகும வீதி நிர்மாண உபகரணங்கள் கம்பனி தவிர்ந்த ஏனைய அரச நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள, வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான வாகனங்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி வாகனங்கள் வழங்கப்பட்டுள்ள திகதிகள் யாவை;

(iii) வழங்கப்பட்டுள்ள வாகனங்களின் இலக்கங்கள் மற்றும் வகைகள் யாவை;

(iv) மேற்படி வாகனங்கள் வழங்கப்பட்டமைக்கான காரணங்கள் யாவை;

(v) தற்போது வீதி அபிவிருத்தி அதிகாரசபை மீளப் பெற்றுக்கொண்டுள்ள வாகனங்கள் யாவை;

(vi) மீளப் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள வாகனங்களின் நிலைமை பற்றிய விபரங்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

## 2012 ஓகத்து 23, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1387/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— இளைஞர் அலுவல்கள், திறன் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2010 மற்றும் 2011 ஆண்டுகளில்,

(i) இளைஞர் அலுவல்கள், திறன் அபிவிருத்தி அமைச்சிற்குச் சொந்தமல்லாத கட்டிடங்களை வாடக்கைக்கு அல்லது குத்தகைக்கு எடுப்பதனால் ஏற்படும் மொத்த செலவினத்தையும்;

(ii) வாடகைக்கு அல்லது குத்தகைக்கு பெற்றுக்கொன்ட கட்டிடங்களின் ஒரு சதுரஅடிக்கான வாடகைப் பெறுமதி யாதென்பதையும்;

(iii) இக்கட்டிடங்களின் குத்தகைக் காலம் எவ்வளவு என்பதையும்

அவர் வெவ்வேறாகக் குறிப்பிடுவாரா?

(ஆ) இளைஞர் அலுவல்கள் திறன் அபிவிருத்தி அமைச்சு தொடர்பாக மேற்படி வருடங்களில்,

(i) அமைச்சுடன் தொடர்புடைய ஏதாவது நிறுவனங்களுக்கு சொந்தமில்லாத வாகனங்களை வாடகைக்கு அல்லது குத்தகைக்குப் பெற்றுக்கொள்வதற்கு ஏற்பட்ட மொத்தச்செலவினம் எவ்வளவு என்பதையும்;

(ii) சொந்தமாகவுள்ள வாகனங்களின் மொத்த எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) ஏனைய வெளிவள சேவைகள் யாவை என்பதையும்;

(iv) மேற்கூறப்பட்ட வெளிவள சேவைகளுக்கு ஏற்பட்ட செலவினம் யாதென்பதையும்;

(v) வெளிவள அடிப்படையில் ஒப்பந்தம் செய்யப்பட்ட நபர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(vi) மொத்த பணியாட்களின் எண்ணிக்கை யாது என்பதையும்

அவர் வெவ்வேறாகக் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1644/ '11

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) களுத்துறை மாவட்டத்தில் அமைந்துள்ள நாகொட கனிஷ்ட வித்தியாலயம் மூடப்பட்டு ஆறு வருடங்கள் கடந்துள்ளதென்பதையும்;

(ii) தற்சமயம், மேற்படி பாடசாலைக்குரிய கட்டிடங்கள் பற்றைக்காடுகள் வளர்ந்து, சிதைவடைந்து வருவதென்பதையும்;

(iii) நகரில் காணப்படும் பிரபல பாடசாலைகளின் இடநெருக்கடியை குறைப்பதற்காக மேற்படி பாடசாலையை மீண்டும் திறக்குமாறு இப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனரென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பாடசாலையை மீண்டும் திறப்பதாயின், இதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்பதையும்;

(ii) இன்றேல், இப்பாடசாலையின் வளங்களை வேறேதேனும் பயனுறுதியான பொருளாதார நோக்கத்திற்காக உபயோகிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனின், மேற்படி பொருளாதார நடவடிக்கை யாதென்பதையும்;

(iv) மேற்படி பொருளாதார நடவடிக்கையை ஆரம்பிப்பதற்கு எடுக்கும் காலவரையறை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2009/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— வெகுசன ஊடக, தகவல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அம்பாந்தோட்டை மாவட்டத்தின் ரன்மிஹிதென்ன சினிமா கிராமம் நிர்மாணிக்கப்பட்டுள்ள நிலப்பரப்பு எத்தனை ஏக்கர்களை கொண்டுள்ளது என்பதையும்;

(ii) இக்கிராமம் திறந்து வைக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iii) திறந்து வைக்கப்பட்ட திகதி முதல் இன்று வரை மேற்படி சினிமா கிராமம் திரைப்படங்கள் மற்றும் தொலைக்காட்சி நாடகங்களை ஒளிப்பதிவு செய்வதற்கு பயன்படுத்தப்பட்ட ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் மேற்படி நிறுவனத்திற்கு கிடைத்த வருமானம் தனித்தனியே எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) ரன்மிஹிதென்ன சினிமா கிராமத்தில் ஒளிப்பதிவு செய்யப்பட்ட தொலைக்காட்சி நாடகங்கள் அல்லது திரைப்படங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு ஆக்கத்தினதும் இயக்குனர், தயாரிப்பாளர் அல்லது தயாரிப்பில் ஈடுபட்ட நிறுவனம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1837/ '11

கௌரவ புத்திக பத்திரண,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தின் மாலிம்பட பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்தின் ஹொரகொட-கிழக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள பாக்யாகம எனப்படுகின்ற எழுச்சிக் கிராமத்தின் குடியிருப்பாளர்களுக்கு அக்காணியை அளந்து, எல்லைக் கற்கள் இட்டு, காணி உரிமங்களுடன் காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டனவென்பதையும்;

(ii) பின்னர் அக்காணிகளின் உரிமை தமக்குரியதென காணிச் சீர்திருத்த ஆணைக்குழு குறிப்பிடுகின்றதென்பதையும்;

(iii) அதற்கிணங்க, அக்காணியை மீண்டும் அளந்து உரிமங்களை வழங்கும் பொருட்டு காணிச் சீர்திருத்த ஆணைக்குழு குடியிருப்பாளர்களிடம் பணம் கோருகின்றதென்பதையும்

அவர்அறிவாரா?

(ஆ) மேற்படி காணிகளை மீண்டும் அளந்து உரிமங்களை வழங்கும் பொருட்டு பணம் கோருவதற்கான காரணங்கள் யாவையென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) இக்காணிகள் மீண்டும் அளக்கப்படுமாயின், அதற்கான திகதி யாது;

(ii) எதிர்காலத்தில் இக்காணிகள் சம்பந்தமான அறுதியுறுதிகளை வழங்க நடவடிக்கை எடுப்பாரா;

(iii) அக்காணிகளுக்காக குடியிருப்பாளர்களிடமிருந்து பணம் அறவிடும் திட்டமொன்று உள்ளதா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2127/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் கொழும்பு – கண்டி பிரதான வீதியில் எவ்வளவு நீளத்திற்கு விஸ்தரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன என்பதையும்;

(ii) மேற்படி வீதியில் விஸ்தரிப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு மற்றும் நிறைவுசெய்யப்பட்ட ஆண்டு யாவையென்பதையும்;

(iii) இதற்காக மதிப்பிடப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி வீதி நிர்மாணிப்புக்கான மதிப்பீட்டை தாண்டும் வகையில் பணம் செலவிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனின், இதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி வீதி விஸ்தரிப்புப் பணிக்காக உப ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், மேற்படி உப ஒப்பந்தம் வழங்கப்படும் போது அங்கீகரிக்கப்பட்ட கேள்பத்திர நடைமுறை பின்பற்றப்பட்டதா என்பதையும்;

(iii) கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டிருப்பின் இதற்காக விண்ணப்பித்தவர்களின் பெயர்கள், முகவரிகள் யாவை என்பதையும்;

(iv) கேள்விப் பத்திரம் வழங்கப்பட்ட நபரின் அல்லது நிறுவனத்தின் பெயர், முகவரி, கேள்விப் பத்திரத் தொகை யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2143/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஹம்பாந்தோட்டையில் பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளுக்கு நிதியிடுவதற்கு அரசாங்கத்திற்கு நிதிகள் வழங்கிய தனியார்துறை நபர்களின் பெயர்களையும்;

(ii) இலங்கையில் மேற்கூறப்பட்ட விளையாட்டுப் போட்டிகளை நடாத்துவதற்கு அவர்களது ஒத்துழைப்பினைப் பெற்றுக் கொள்வதற்கு இங்கு வரவழைக்கப்பட்ட நபர்களின் எண்ணிக்கை மற்றும் பெயர்களையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) இலங்கைக்கான அவர்களது ஒத்துழைப்பினைப் பெற்றுக் கொள்வதற்கு வெளிநாட்டிற்குச் சென்ற நபர்களின் எண்ணிக்கையையும்;

(ii) சென்றவர்களின் பெயர்களையும்;

(iii) ஏற்பட்ட மொத்தச் செலவினத்தையும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(இ) (i) 2011 நவெம்பர் மாதத்தில் புனித கிற்ஸ் இற்குச் சென்ற நபர்களின் எண்ணிக்கையையும்;

(ii) சென்ற நபர்களின் பெயர்களையும்;

(iii) மீள்வருகைப் பயணத்திற்கான மொத்தச் செலவினத்தையும்;

(iv) குறிப்பிடப்பட்ட பிரத்தியேக வாடகைக்கு அமர்த்திய விமானத்திற்கான செலவினத்தையும்;

(v) இலங்கை பொதுநலவாய விளையாட்டுப்போட்டிகளை நடாத்துவது தொடர்பில் வெற்றிபெறுவது நிச்சயம் என பெருமளவு நம்பிக்கையுடன் காணப்பட்ட பின்னர், அதனை எவ்வாறு இழந்தது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1838/ '11

கௌரவ புத்திக பத்திரண,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வரக்காபொல, அம்பேபுஸ்ஸ, தேவால வீதி, இலக்கம் 11 இல் வதியும் சிரேட்ட ஊடகவியலாளர் திரு. டி.பி. எல்கடுவவிடமிருந்து குற்றப் புலனாய்வுத் திணைக்களம் அரசுக்கெதிரான சதிக் கற்றச்சாட்டுகள் சம்பந்தமாக 2009.10.09 ஆந் திகதியும் 2011.02.08 ஆந் திகதியும் வாக்குமூலங்களைப் பெற்றுள்ளதென்பதையும்;

(ii) திரு. எல்கடுவவுக்கு தொடர்ச்சியாக தொல்லை கொடுப்பதால் இவர் கடுமையான பொருளாதார மற்றும் உளரீதியான அழுத்தத்திற்கு ஆளாகியுள்ளாரென்பதையும்;

(iii) சுதந்திர ஊடகப் பாவனைக்கு இடமளிக்குமாறு இவர் பொறுப்புவாய்ந்த அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளாரென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) திரு.எல்கடுவவின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்க அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா என்பதையும்;

(ii) இவருக்கு எதிர்நோக்க நேரிட்டுள்ள வசதியீனங்கள் பற்றிய முறையான விசாரணையொன்றை நடாத்த நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2128/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2006 ஆம் ஆண்டு முதல் இற்றை வரை பண்டுவஸ்நுவர தேர்தல் தொகுதியில் அரசாங்க நிதியின் கீழ் அல்லது வெளிநாட்டு உதவியின் கீழ் மறுசீரமைக்கப்பட்டுள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு, மாகாண சபைக்கு மற்றும் பிரதேச சபைக்குச் சொந்தமான வீதிகள் தனித்தனியாக யாவையென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு வீதிக்காகவும் மதிப்பிடப்பட்டுள்ள பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு வீதியின் நீளம், அகலம் மற்றும் மறுசீரமைக்கப்பட்ட நிலை (தார், கொன்கிறீற், கொன்கிறீற் கல்) யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி வீதி மறுசீரமைப்பு தொடர்பாக கேள்விப்பத்திர நடைமுறை பின்பற்றப்பட்டதா என்பதையும்;

(ii) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iii) கேள்விப் பத்திரம் கோரப்பட்டிருப்பின், ஒவ்வொரு வீதிக்காகவும் கேள்விப் பத்திரங்களை முன்வைத்தவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்;

(iv) கேள்விப் பத்திரம் வழங்கப்பட்டவரின் பெயர் மற்றும் முகவரி யாதென்பதையும்

அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்படி ஒவ்வொரு வீதியினதும் மறுசீரமைப்புப் பணியின் முடிவில் செலவிடப்பட்டிருந்த மொத்தப் பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி வீதிகளின் மறுசீரமைப்புப் பணிகள் முடிவடைந்ததன் பின்னர் ஒப்பந்தங்கள் வழங்கப்பட்ட நிறுவனங்களால் தொழில்நுட்ப அறிக்கை வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி அறிக்கைகளை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2144/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மெதிரிகிரிய தேசிய பாடசாலையில் பாரிய அளவிலான ஊழல் தொடர்ந்தும் இடம்பெறுவதையும்;

(ii) மேற்குறிப்பிடப்பட்டுள்ள பாடசாலையில் இடம்பெற்ற நிதிக் கையாடல்களில் சிலவற்றினை சனாதிபதி விசாரணைப் பிரிவு அம்பலப்படுத்தியுள்ளதையும்;

(iii) இச் சீர்கேடான நடைமுறைகளில் சிலவற்றைப் பற்றிப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளதையும்;

(iv) இப்பாசாலையின் அதிபர், பாடசாலையை முன்னேற்றுவதனைப் புறக்கணித்துவிட்டு மோசடியான முறையில் பணம் சம்பாதிப்பதிலேயே முழுக் கவனத்தையும் செலுத்துவதையும்;

(v) அதிபரினால் கடைப்பிடிக்கப்படும் சீர்கேடான நடவடிக்கைகளை எதிர்க்கும் நேர்மையான ஆசிரியர்களை தொந்தரவுக்குட்படுத்துவதையும்;

(vi) இவ்வாறான அதிபர்கள் இந்த நாட்டின் இளைஞர்களை அழிக்கின்றமையினால், இவர்கள் இலங்கைக்கே தொல்லை கொடுப்பவர்கள் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) இவ்விடயங்களைச் சீர்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை அவர் இச்சபைக்கு அறியத் தருவாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2012 ஓகத்து 24 வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1389/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2010 மற்றும் 2011 ஆண்டுகளில்,

(i) கல்வி அமைச்சிற்கு சொந்தமல்லாத கட்டிடங்களை வாடக்கைக்கு அல்லது குத்தகைக்கு எடுப்பதனால் ஏற்படும் மொத்த செலவினத்தையும்;

(ii) வாடகைக்கு அல்லது குத்தகைக்கு பெற்றுக்கொன்ட கட்டிடங்களின் ஓர் சதுரஅடிக்கான வாடகைப் பெறுமதி யாதென்பதையும்;

(iii) இக்கட்டிடங்களின் குத்தகைக் காலம் எவ்வளவு என்பதையும்

அவர் வெவ்வேறாகக் குறிப்பிடுவாரா?

(ஆ) கல்வி அமைச்சு தொடர்பாக மேற்படி வருடங்களில்,

(i) அமைச்சுடன் தொடர்புடைய ஏதாவது நிறுவனங்களுக்கு சொந்தமில்லாத வாகனங்களை வாடகைக்கு அல்லது குத்தகைக்குப் பெற்றுக்கொள்வதற்கு ஏற்பட்ட மொத்த செலவினம் எவ்வளவு என்பதையும்;

(ii) சொந்தமாகவுள்ள வாகனங்களின் மொத்த எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) ஏனைய வெளிவள சேவைகள் யாவை என்பதையும்;

(iv) மேற்கூறப்பட்ட வெளிவள சேவைகளுக்கு ஏற்பட்ட செலவினம் யாதென்பதையும்;

(v) வெளிவள அடிப்படையில் ஒப்பந்தம் செய்யப்பட்ட நபர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(vi) மொத்த பணியாட்களின் எண்ணிக்கை யாது என்பதையும்

அவர் வெவ்வேறாகக் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1645/ '11

கௌரவ புத்திக பத்திரண,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அம்பாந்தோட்டை மாவட்டத்தின் பெலியத்த பிரதேசத்தில் அமைந்துள்ள பெலியத்த பொது வர்த்தக கட்டிடத்தொகுதியின் நிர்மாணப் பணிகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டு பல வருடங்கள் கடந்துள்ளதென்பதையும்;

(ii) மேற்படி வர்த்தக கட்டிடத்தொகுதியின் நிர்மாணப் பணிகளை நிறைவு செய்யாமையினால் இப்பிரதேச விவசாய குடிமக்கள் தமது விவசாய உற்பத்திகளை விற்பனை செய்வதில் பல்வேறு சிக்கல்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனரென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வர்த்தக கட்டிடத் தொகுதியின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) மேற்படி நிர்மாணப் பணிகளை நிறுத்துவதற்கு ஏதுவாயமைந்த காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி வர்த்தக கட்டிடத் தொகுதியின் நிர்மாணப் பணிகளை மீண்டும் ஆரம்பித்து விரைவில் நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) இதற்காக எடுக்கும் கால வரையறை யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2020/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— புனர்வாழ்வளிப்பு, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட சிறைச்சாலைக் காவலர் – வகுப்பு இரண்டு மற்றும் நலனோம்புகை அலுவலர் – வகுப்பு இரண்டு பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சைக்கு தோற்றிய அபேட்சகர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி பதவிகளுக்கான வெற்றிடங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) மேற்படி வெற்றிடங்களுக்கு, குறித்த போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் தற்போது ஆட்சேர்க்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், ஆட்சேர்க்கப்பட்ட ஆகக் குறைந்த வெட்டுப் புள்ளி யாது என்பதையும்;

(v) மேலே குறிப்பிடப்பட்டவாறு ஆட்சேர்க்கப்பட்டவர்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் பெற்றுக் கொண்ட புள்ளிகள் தனித்தனியே யாவை என்பதையும்;

(vi) மேற்படி போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையிலான ஆட்சேர்ப்புக்கு மேலதிகமாக வேறு ஆட்கள் ஆட்சேர்க்கப்பட்டிருப்பின் அவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை என்பதையும்;

(vii) அவ்வாறு ஆட்சேர்க்கப்பட்டமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1839/ '11

கௌரவ புத்திக பத்திரண,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அம்பாந்தோட்டை மாவட்டத்தின் வலஸ்முல்ல பிரதேசத்தில் அமைந்துள்ள ஹெல்வெல்ல குடும்ப சுகாதார சேவைகள் நிலையக் கட்டடம் சிதைவடைந்துள்ளதென்பதை அவர் அறிவாரா;

(ஆ) ஆமெனில், பகுதிவாழ் மக்களின் சுகாதாரத் தேவைப்பாடுகளை ஈடேற்றிக் கொடுக்க இயலுமான வகையில் அக்கட்டடத்தைத் திருத்தியமைக்க துரித நடவடிக்கைகளை மேற்கொள்வாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி கட்டடத்தை திருத்தியமைக்க தற்போது நிதியேற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளனவா;

(ii) அவ்வாறு ஒதுக்கப்பட்டுள்ள பணத்தொகை யாது;

(iii) புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாது

என்பதை அவர்குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2129/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தென் அதிவேக வீதியின் ஒரு திசைக்குள்ள ஒழுங்கைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி ஒழுங்கையொன்றின் அகலம் யாதென்பதையும்;

(iii) அதிவேக வீதி ஒழுங்கையொன்றுக்கான சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அகலம் யாதென்பதையும்

(iv) சேவைகள் வழங்குவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள ஒழுங்கையின் அகலம் யாதென்பதையும்;

(v) அதற்கான சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள அகலம் யாதென்பதையும்;

(vi) மேற்படி ஒழுங்கைகளின் அகலம் சர்வதேச தரத்தை விட குறைவாயுள்ளதா என்பதையும்;

(vii) அவ்வாறெனின் அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2183/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காணி, காணி அபிவிருத்தி அமைச்சின் காணி உரித்துரிமையளிக்கும் பிரிவு தற்போதைய உரித்துப் பதிவுச் சட்டத்தில் பல குறைபாடுகள் இருப்பதை இனங்கண்டுள்ளது என்பதையும்;

(ii) இலங்கை சட்டத்தரணிகள் சங்கமும் மேற்படி சட்டத்தை திருத்துவதற்கான பரிந்துரை செய்துள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி (அ)(i) மற்றும் (ஆ)(ii) இன் பிரகாரம் உரித்துப் பதிவுச் சட்டத்தில் இனங்காணப்பட்ட குறைபாடுகளையும் பிரேரிக்கப்பட்டுள்ள பரிந்துரைகளையும் வெவ்வேறாக அவர் கூறுவாரா?

(இ) பாராளுமன்றத்தின் மூலமாக அவ்வாறான திருத்தங்களை மேற்கொள்வதற்கு எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகளை அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(ஈ) (i) இச்சட்டத்தில் பல குறைபாடுகள் இருந்தும், காணி, காணி அபிவிருத்தி அமைச்சு 1998ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க உரித்துப் பதிவுச் சட்டத்தை முனைப்பாக நடைமுறைப்படுத்தி வருகின்றது என்பதையும்;

(ii) இனங்காணப்பட்ட குறைபாடுகளைத் திருத்தாமல் 105 புதிய பிரிவுகளை மேற்படி சட்டத்தில் கூட்டிணைப்பதற்கு சம்பந்தப்பட்ட அமைச்சு முயற்சிக்கின்றது என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(உ) இன்றேல், ஏன்?

1840/ '11

கௌரவ புத்திக பத்திரண,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாந்தோட்டை மாவட்டத்தின் முல்கிரிகல பிரதேசத்தில் வலஸ்முல்ல புதிய சந்தைத் தொகுதி திறக்கப்பட்டு ஒன்றரை வருடங்கள் கழிந்துள்ள போதிலும், இற்றைவரை எவ்விதமான பயனும் பெறப்படாதுள்ளது என்பதையும்;

(ii) புதிய சந்தையின் நிர்மாணப்பணிகள் உரிய தரமின்றி மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி சந்தையை நிர்மாணிக்க செலவிடப்பட்ட மொத்தப் பணத்தொகை எவ்வளவு;

(ii) மேற்படி நிதியங்கள் உள்நாட்டு அல்லது வெளிநாட்டு மூலங்களிலிருந்தா பெறப்பட்டன;

(iii) நிதியங்களை வழங்கிய நிறுவனம் அல்லது நிறுவனங்கள் யாவை

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) வலஸ்முல்ல புதிய சந்தை உரிய தரமின்றி நிர்மாணிக்கப்பட்டமை தொடர்பில் முறையான விசாரணையொன்றை நடாத்த நடவடிக்கை எடுப்பாரா;

(ii) மக்கள் பயன்பெறும் பொருட்டு பாவனைக்கு எடுக்கத்தக்கவகையில் சந்தையைப் புனரமைப்பாரா;

(iii) ஆமெனில், அது எப்போது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2130/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2005 ஆம் ஆண்டு முதல் 2011 வரையிலான கால கட்டத்தினுள் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் இணைப்பாளர்களாக கடமையாற்றிய ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இணைப்பாளர்களின் பெயர்கள் மற்றும் அவர்கள் இணைக்கப்பட்டுள்ள பிரதேசங்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி பதவி வழங்கப்பட்டுள்ள கால எல்லை யாதென்பதையும்;

(iv) இவர்களது மாதாந்த சம்பளமும் ஏனைய கொடுப்பனவுகளும் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

கௌரவ ரவி கருணாநாயக்க,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கல்கிஸை மாவட்ட நீதிமன்றக் கட்டடத்தொகுதியில் பொதுமக்களின் நன்மைக்காக பொருத்தப்பட்டுள்ள மின்உயர்த்தி இயங்குகின்றதா என்பதையும்;

(ii) இன்றேல், அது இயங்காமலிருப்பதற்கான காரணங்களையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) மேற்சொல்லப்பட்ட மின்உயர்த்தியை பொருத்துவதற்கு மதிப்பிடப்பட்ட செலவினத்தையும்;

(ii) மின்உயர்த்தியை பொருத்திய பொறியியலாளர்களையும்;

(iii) மின்உயர்த்தி பொருத்துகையை அவர்கள் உரியமுறையில் செய்துள்ளனரா என்பதையும்;

(iv) இம் மின்உயர்த்தி தொடர்பாக ஏதாவது பிரச்சினைகள் உள்ளனவா என்பதையும்;

(v) அவ்வாறெனில், இனங்காணப்பட்ட முக்கியமான பிரச்சினையையும்

அவர் மேலும் கூறுவாரா?

(இ) (i) மின்உயர்த்தி மற்றும் அதன் பாவனை பற்றிய பிரச்சினைகள் தொடர்பான பல்வேறு முறையீடுகளை கல்கிஸை சட்டத்தரணிகள் சங்கம் அமைச்சிடம் தெரிவித்துள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி முறையீடுகளில் எழுப்பப்பட்ட விடயங்களைச் நிவர்த்திப்பதற்கு ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளையும் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவிருக்கும் நடவடிக்கைகளையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?